**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

**OS.No:** 42/2023 நாள் 17.11.2025.

வாசா.1, திருமதி.குருவம்மாள்

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1 முதல் 6 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் எத்தனை வகுப்பு வரை படித்துள்ளேன் என்று கேட்டால் படிக்கவில்லை. நான் என்ன விபரம் கண்டு வழக்குரையை தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியும். எனக்கு வயது தற்போது 58.எனக்கு திருமணம் ஆகி 48 ஆண்டு காலம் ஆகிறது. என் அக்காவான 1ம் வாதிக்கு திருமணம் ஆகி சுமார் 52 ஆண்டு காலம் இருக்கும். எனக்கு திருமணம் ஆனதுமுதல் கொண்டு நான் என் கணவர் ஊரான உத்தமபாளையம் தாலுகா அம்மாப்பட்டி ஊரில் தான் வசித்து வருகிறேன். மாரியப்ப செட்டியாருக்கு 1)பெரிய குருசாமி செட்டியார் 2) சின்ன குருசாமி செட்டியார் என்ற இரு மகன்கள் தான் வாரிசுகள். பெரிய குருசாமி செட்டியாருக்கு சுந்தரராஜ் என்ற ஒரு மகனும், சின்ன குருசாமி செட்டியாருக்கு சுந்தரராஜ் என்ற மகனும் வாரிசுகள். என் அக்காவுக்கு திருமணம் ஆகி சின்னகுருசாமி செட்டியார் மகனான சுந்தரராஜ் வீட்டிற்கு பக்கத்தில் தான் அவர் வசித்து என்றால் சரிதான். என் அக்காள் தினசரி விவசாய கூலி வேலைக்காக தான் சென்றுவருவார். சின்ன குருசாமி செட்டியார் மகன் சுந்தரராஜ் என்பவர் தான் பிராது தபசில் சொத்தை விவசாயம் பார்த்து வந்து ஊரில் உள்ள களத்தில் நெல், மக்காச்சோளம் போன்ற தானியங்களை வைத்து வியாபாரம் செய்து வந்தார் என்று சொன்னால் அதுசரியல்ல. சின்ன குருசாமி செட்டியார் தான் விவசயாம் பார்த்து வந்தார் அவரது மகன் சுந்தரராஜ் காணாமல் போய்விட்டார். எனக்கும் என் அக்காளுக்கும் திருமணத்தை பெரிய குருசாமி செட்டியாரும் அவரது மனைவி மாரியம்மாளும் சேர்ந்து தான் மாப்பிள்ளை வரன் பார்த்து நகை சீர் சீராட்டுகளை போட்டு திருமணம் செய்து வைத்தார்கள் என்று சொன்னால் அப்படியில்லை என் பெற்றோர்கள் தான் எங்கள் திருமணத்தை செய்துவைத்தார்கள். சின்ன குருசாமி செட்டியார் எந்த ஆண்டு காலமானார் என்று எனக்கு வருடம் ஞாபகமில்லை. சின்ன குருசாமி செட்டியார் மனைவி எந்த ஆண்டு இறந்துபோனார் என்று கேட்டால் எனக்கு திருமணம் ஆகி 6 மாதத்திற்குள்ளாகவே அவர் இறந்துபோனார். நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சின்ன குருசாமி செட்டியார் இந்த ஆண்டு தான் இறந்துபோனார் என்று சொல்லியுள்ளனா என்று கேட்டால் எனக்கு ஞாபகமில்லை. நாங்கள் தாக்கல்

செய்துள்ள வழக்குரையிலும் நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் சின்ன குருசாமி செட்டியார் மனைவி பெயரையும் என் அம்மா பெயரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. என் அம்மா பெயர் வீரம்மாள். சின்ன குருசாமி செட்டியாரின் வாரிசு தாரர்கள் நாங்கள் அல்ல என்பதால் தான் அவரது இறப்புஆண்டை கூட எங்களால் சொல்லமுடியாது என்றால் அது சரியல்ல. அவருடைய வாரிசுதாரர்களாக நாங்கள் 4 பேர் உள்ளோம். சின்ன குருசாமி செட்டியாரின் மனைவி பெயர் செல்லம்மாள் தான் என்றும் நான் சொல்வது போல் வீரம்மாள் அல்ல என்று சொன்னால் என் அம்மாவுக்கு செல்லம்மாள், வீரம்மாள் என்ற இரண்டு பெயர்கள் உண்டு. சின்ன குருசாமி செட்டியாரின் வாரிசுகள் நாங்கள் தான் என்பதை காண்பிக்ககூடிய வாரிசு சான்றோ, ஆதார் அட்டைகளோ, குடும்ப அட்டையோ நாங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்று கேட்டால் இல்லை. நாங்கள் சின்ன குருசாமி செட்டியாரின் வாரிசுதாரர்கள் அல்ல் என்பதால் தான் மேற்படி ஆவணங்களை எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. சின்ன குருசாமி செட்டியாரின் வாரிசுதாரர் 1ம் எதிர்வாதி சுந்தரராஜ் என்று அவர் வாரிசு சான்றிதழை வைத்துள்ளார் என்று சொன்னால் அது பொய்யான வாரிசு சான்றாகும். அந்த வாரிசு சான்று பொய்யானது என்று சொல்லி நான் வருவாய் வட்டாட்சியரிடமோ வருவாய் கோட்டாச்சியரிடமோ ரத்து செய்யவேண்டி மனு கொடுத்துள்ளேனா என்று கேட்டால் கொடுத்துள்ளேன். நான் அவ்வாறு மனு கொடுத்ததாக சொல்லும் மனுவின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எந்தவிதமான ஆட்சேபணை மனுவையும் வருவாய் வட்டாட்சியரிடமும், கோட்டாட்சியரிடமும் கொடுக்கவில்லை என்றும் அவ்வாறு கொடுத்திருந்தால் அதன நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும் சின்ன குருசாமி செட்டியாரின் வாரிசுதாரர்கள் நாங்கள் தான் என்று சொல்லி பொய்யாக வழக்காடி வருகிறோம் என்று சொன்னால் அது சரியல்ல. பெரிய குருசாமி செட்டியார் மகன் சுந்தரராஜ் என்பவர் சின்ன குருசாமி செட்டியார் மீது சிவகாசி குற்றவியல்நடுவர் நீதிமன்றம்எண்.2 நீதிமன்றத்தில் நடைபெற்ற குற்ற வழக்கில் நானும் என் அக்காவும் பெரிய குருசாமி செட்டியார் மகன் சுந்தரராஜுக்கு ஆதரவாக ஆஜராகி சாட்சியம் அளித்தோமா என்று கேட்டால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை . பெரிய குருசாமி செட்டியார் மகன் சுந்தரராஜுக்கும்

சின்ன குருசாமி செட்டியாருக்கும் இடையில் சண்டை நடந்தது. அந்த நீதிமன்றத்தில் நானும் என் அக்காவும் சின்ன குருசாமி செட்டியார் யார் என்று எங்களுக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்தோம் என்றால அப்படியில்லை. அந்த நீதிமன்றத்தில் நான் ஆஜராகி சாட்சியம் அளித்திருந்தால் அந்த சாட்சிய வாக்குமூலத்தை எடுத்து பார்த்தால் தெரியும் என்று சொன்னால் எடுத்து பார்க்கலாம். எனக்கு திருமணம் ஆகி 40 ஆண்டு காலம் ஆகி நான் என் கணவர் வீட்டாருடன் சென்றுவிட்டேன் என்பதால் யார் விவசாயம் பார்த்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் என் அப்பா உயிரோடு இருந்த காலம் வரையிலும் அவர் தான் விவசாயம் பார்த்து எங்களுக்கு அதில் இருந்து வந்த மகசூலையும் கொடுத்து வந்தார். என் அப்பா இறந்த பிறகு அந்த நிலத்தில் விவசாயம் பார்க்காமல் சும்மா தான் இருக்கிறது. பிராது சொத்தை பொறுத்த மட்டில் 1ம் எதிர்வாதியானவர் 2 முதல் 7 எதிர்வாதிகளுக்கு செட்டில் மெண்ட் ஆவணம் போன்ற சொத்து பரிமாற்ற ஆவணங்களை எழுதிக்கொடுத்தது 21.11.2022ம் ஆண்டு தான் என்று எனக்கு தெரியவந்ததாக நான் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்று கேட்டால் வழக்குரையில் சொல்லவில்லை. பிராது சொத்தை 35 ஆண்டுகாலத்திற்கு மேலாக 1ம் எதிர்வாதி தான் அனுபவித்து வருகிறார் என்றும் நான் முன்னுக்கு பின் முரணமாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள் சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் 1ம் எதிர்வாதி பெற்ற வாரிசு சான்றிதழை ரத்து செய்துள்ளார்கள் என்று நான் சொல்லியுள்ளேனா என்று கேட்டால் அப்படி சொல்லவில்லை. நானும், என் அக்காவும் சின்ன குருசாமி செட்டியாரின் வாரிசுகள் அல்ல என்றும் தற்போது வழக்கிற்காக வேண்டி சின்ன குருசாமி செட்டியாரின் வாரிசுதாரர்கள் என்று தவறாக சொல்லிவருகிறோம் என்று சொன்னால் அது சரியல்ல. பெரிய குருசாமி செட்டியாருக்கும் மற்றும சின்ன குருசாமி செட்டியாருக்கும் இடையில் சொத்து சம்மந்தமாக விருதுநகரில் வழக்கு நடைபெறுகிறது என்றம் என்னையும் என் அக்காவையும் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்று கேட்டால் தெரியும். (அ.வ.எண்.212/2022 மாவட்ட உரிமையியில் நீதிமன்றம், விருதுநகர்.) பெரிய குருசாமி செட்டியார் தான் எங்களை வளர்த்து திருமணம் செய்துவைத்தார் என்று சொன்னால்அது சரியல்ல. சின்ன குருசாமி செட்டியாரின் சொத்தை அபகரிக்க

வேண்டியே நாங்கள் பெரிய குருசாமி செட்டியார் மற்றும் அவரது மகன் சுந்தரராஜுடன் சேர்ந்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. கொடிவழி ஜாபிதாவானது எங்களால் தவறாக தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் அது சரியல்ல. நாங்கள் கோரியுள்ள 1 முதல் 15 வரையிலான விளம்புகை பரிகாரம் எங்களுக்கு கிடைக்ககூடியதாக இல்லை என்றும் எனவே பிராதை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் அது சரியல்ல. எனவே 1 முதல் 6 எதிர்வாதிகளை பொறுத்து இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் அது சரியல்ல.

**(குறுக்கு விசாரணை 7ம் எதிர்வாதி தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 17th day of November 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.